சிவாஜி கணேசன் மூத்த மகள் சாந்தி நாராயணசாமி மரணம்

சென்னை, செப்.21: சிவாஜி கணேசன் மூத்த மகள் சாந்தி நாராயணசாமி (72), உடல்நலக்குறைவு காரணமாக நேற்று அதிகாலை மரணம் அடைந்தார். அவருக்கு திரையுலகினரும், ரசிகர்களும் இறுதி அஞ்சலி செலுத்தினர். நேற்று மாலை சாந்தி நாராயணசாமியின் இறுதிச்சடங்கு நடந்தது.

மறைந்த நடிகர் திலகம் சிவாஜி கணேசன், கமலா அம்மாள் தம்பதிக்கு சாந்தி, தேன்மொழி ஆகிய மகள்களும், நடிகர்கள் ராம்குமார், பிரபு ஆகிய மகன்களும் இருக்கின்றனர். இவர்களில் மூத்தவர், சாந்தி. முதல் பெண் குழந்தை என்பதால், சிவாஜி கணேசனுக்கு அவர் மீது அதிக பாசம் என்று சொல்வார்கள். சென்னை அண்ணா சாலையில் சிவாஜி கணேசன் கட்டிய தியேட்டருக்கு ‘சாந்தி தியேட்டர்’ என்று பெயர் சூட்டப்பட்டது. இப்போது அந்த தியேட்டர் இடிக்கப்பட்டு அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டுள்ளது. சாந்தி, நாராயணசாமி திருமண விழாவில் காமராஜர், பெரியார், அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், பாடகி லதா மங்கேஷ்கர் ஆகியோர் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது.

நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் மகள் சாந்தி மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று இறுதி மரியாதை செலுத்தினார். அருகில், துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்எல்ஏ வி.ஜி.ராஜேந்திரன் உள்ளிட்டோர்.

மு.க.ஸ்டாலின் இரங்கல்

நடிகர் திலகம் செவாலியே சிவாஜி கணேசனின் மகள் சாந்தி மறைவெய்தியதையடுத்து, காவேரி மருத்துவமனையில் அவரது உடலுக்கு நேற்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் இறுதி மரியாதை செலுத்தினார். அப்போது, அவரது மனைவி துர்கா ஸ்டாலின், தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, முன்னாள் எம்எல்ஏ வி.ஜி. ராஜேந்திரன் உள்ளிட்டோர் உடனிருந்தனர். தொடர்ந்து, திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்ட இரங்கல் செய்தி:

தலைவர் கலைஞரும்- நடிகர் திலகம் சிவாஜி கணேசனும் நட்புக்கு இலக்கணமாய் வாழ்ந்தவர்கள். காலத்தால் கரையாத அவர்களது நட்பின் பாசம், இரு குடும்பங்களையும் தலைமுறைகள் கடந்த உறவாகப் பிணைத்திருக்கிறது. அந்த பாசப் பிணைப்பில் எங்கள் குடும்பத்தில் ஒருவராகவே அன்பு பாராட்டி வந்த சகோதரி சாந்தியின் மறைவு மிகுந்த வேதனையளிக்கிறது. அவரது மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறேன். அன்புச் சகோதரியை இழந்து ஆற்றொணாத் துயரில் வாடும் அவரது கணவர் நாராயணசாமி, மகள்கள் விஜி லட்சுமி, சத்யவதி, சகோதரர்கள் ராம்குமார், பிரபு உள்ளிட்ட குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் ஆறுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இடைத்தேர்தலால் மக்கள் வரிப்பணம் வீண்

பதவியை ராஜினாமா செய்தவர்களிடம் பொருளாதார இழப்பை வசூலிக்க வேண்டும்

மல்லை சத்யா வலியுறுத்தல்

சென்னை, செப்.21: திராவிட வெற்றிக் கழக தலைவர் மல்லை சத்யா வெளியிட்டுள்ள அறிக்கை:

2031-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற வேண்டிய சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ள வேண்டிய நிலையில், ஒரே ஆண்டில் இரண்டாவது முறையாக தேர்தலை சந்திக்கும் சூழ்நிலை ஏன், எதற்காக, யாரால் ஏற்பட்டது என்ற கேள்வி எழுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் இயற்கை எய்துவது அல்லது நீதிமன்றத்தால் 2 ஆண்டுகளுக்கு மேல் தண்டனை பெறுவது போன்ற காரணங்களால் இடைத்தேர்தல் நடைபெறுவது இயல்பானது. ஆனால், இதுபோன்ற காரணங்கள் இல்லாமல் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி, தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களிலேயே தனது சுயலாபத்துக்காக பதவியை ராஜினாமா செய்வதால் மக்களின் வரிப்பணம் வீணாகிறது.

எனவே, எந்தவிதமான சரியான காரணமும் இல்லாமல் பொறுப்பற்ற முறையில் ராஜினாமா செய்யும் நபரிடம், அதனால் ஏற்படும் பொருளாதார இழப்பை வசூலிப்பதுடன், குறிப்பிட்ட காலத்திற்கு அவர் மீண்டும் தேர்தலில் போட்டியிட முடியாத வகையில் சட்ட திருத்தம் கொண்டு வர வேண்டும். தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் சுயநல காரணங்களுக்காக பதவியை ராஜினாமா செய்து மீண்டும் தேர்தலில் போட்டியிடுவதை தடுக்க சட்டம் கொண்டு வரவேண்டும். சட்டமன்ற உறுப்பினருக்கு சம்பளம், பயணப்படி உள்ளிட்ட பல சலுகைகள் கிடைக்கின்றன. 5 ஆண்டுகளில் குறைந்தபட்சம் ரூ.1.20 கோடி அளவுக்கு வருவாய் கிடைக்கும் நிலையில், அந்த பதவியை ராஜினாமா செய்வதன் மூலம் கிடைக்கும் ஆதாயம் என்ன என்ற கேள்வியும் எழுகிறது. எனவே, ஜனநாயகத்துக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டதாக குற்றம்சாட்டப்படும் அதே நபர்கள் இடைத்தேர்தலில் மீண்டும் போட்டியிட்டால், அவர்களை வாக்காளர்கள் நிராகரிக்க வேண்டும்.

இடைத்தேர்தலில் ஆட்சியாளர்களுக்கு சரியான தண்டனையை வழங்க வேண்டும்

உதயநிதி ஸ்டாலின் பேச்சு

சென்னை, செப்.21: மதுராந்தகம், தாராபுரம் பகுதியில் நடக்க இருக்கும் இடைத்தேர்தலில் ஆட்சியாளர்களுக்கு சரியான தண்டனையை வழங்க வேண்டும் என உதயநிதி ஸ்டாலின் பேசி உள்ளார்.

பூந்தமல்லி நகர இளைஞரணி அமைப்பாளர் முகம்மது ராஷிக் - மரியம் பாத்திமா ஆகியோரின் திருமணத்தை வேலப்பன் சாவடியில் எதிர்க்கட்சித் தலைவரும், திமுக இளைஞரணி தலைவருமான உதயநிதி ஸ்டாலின் நேற்று நடத்தி வைத்தார். இதனை தொடர்ந்து மணமக்களை வாழ்த்தி பேசினார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் ஆவடி சா.மு. நாசர், முன்னாள் எம்எல்ஏ ஆ.கிருஷ்ணசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:

தமிழகம் இன்றைக்கு ஒரு சர்க்கஸ் கும்பலிடம் மாட்டிக்கொண்டு முழித்துகொண்டிருக்கிறது. சட்டம் ஒழுங்கு என்ன நிலையில் இருக்கு என்று உங்களுக்கு தெரியும். நேற்று முன்தினம் மட்டும் தமிழகத்தில் எட்டு படுகொலைகள் நடந்திருக்கிறது. மின்வெட்டு தமிழகத்தில் உச்சத்தில் இருக்கிறது. ஆட்சிக்கு வந்து நான்கு மாதங்கள் ஆகிவிட்டது. ஆனால் ஒரு திட்டத்தை கூட முழுவதாக நிறைவேற்றவில்லை. முதலமைச்சர் வாயை திறப்பதே இல்லை. வாயை திறந்தால் வெறும் ‘பஞ்ச்’ டயலாக் தான். அதுவும் எங்களை பார்த்து பேசுவதில்லை. கேமரா எங்கு இருக்கிறது என பார்த்து, ஆங்கிள் எல்லாம் பார்த்து, சபாநாயகர் கிட்ட அனுமதி வாங்கி, ‘டேக்’ போகலாமா என கேட்டு, சபாநாயகர் ‘ஆக்‌ஷன்’ சொன்ன பின் முதலமைச்சர் தனது ‘பஞ்ச்’ டயலாக் பேசுகிறார். கடந்த நான்கு மாதமாக சட்ட ஒழுங்கு பிரச்சனை மோசமாக இருக்கு என்று நான் கேள்வி கேட்டேன். கிட்டத்தட்ட 35 நிமிடம் பேசினேன். 16 கேள்விகள் முதலமைச்சரிடம் கேட்டேன். முதலமைச்சர், மூன்று மணி நேரம் எடுத்துக் கொண்டு தயாராக வாங்க. அதிகாரிகளிடம் என்ன பிரச்சனை என்று கேளுங்கள். இதற்கு என்ன தீர்வு என்னவென்று கேளுங்கள் கேட்டு பதில் சொல்லுங்கள் என நான் கேட்டேன். முதலமைச்சர் சொல்லிவிட்டு சட்டசபையை விட்டு ஓடிப்போய் விட்டார். நான் கூட தயாராகதான் ஓடிப்போகிறார். பதில்களை தயார் செய்து மூன்று நாள் கழித்து பதில் சொல்வார் என நினைத்து காத்திருந்தேன். ஆனால், நான் கேட்ட ஒரு கேள்விக்கு கூட முறையான பதில் இல்லை. இந்த ‘ரீல்ஸ்’ கும்பலுக்கு வாக்களித்த கொஞ்சம், நஞ்சம் மக்களும் ஏன்டா வாக்களித்தோம் என கவலையில் உள்ளனர். ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என எந்த வரிசையில் இருந்தாலும் தி.மு.க., என்றைக்கும் மக்களுக்காக களத்தில் நிற்கும்.

இவ்வாறு பேசினார்.

வெற்றி உறுதி

மதுராந்தகத்தில் நடந்த தி.மு.க. இளைஞர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டத்தில் உதயநிதி பேசுகையில்,‘ மதுராந்தகம் சட்டமன்றத்திற்கான இடைத்தேர்தலில் நிச்சயம் நாம் வெற்றி பெற வேண்டும். முதலில் சற்றுப் பின்னோக்கிப் பாருங்கள். எதற்காக இந்த இடைத்தேர்தல் வந்தது? இது சாதாரணமாக வந்த இடைத்தேர்தலா? இது இயல்பாக நடந்த, நடக்கக்கூடிய ஒரு இடைத்தேர்தலா? இல்லை. இது ஒரு திணிக்கப்பட்ட தேர்தல். ஆளுங்கட்சியின் குதிரைபேர அரசியலால், இங்கே ஏற்கனவே வெற்றி பெற்ற வேட்பாளர் ஆளுங்கட்சியிடம் விலை போன காரணத்தினால், இன்றைக்கு மதுராந்தகத்தில் இந்த ஒரு இடைத்தேர்தல், மதுராந்தகத்தில் மட்டும் கிடையாது, இனி தாராபுரத்திலும் சேர்த்து இந்த இடைத்தேர்தல் உங்கள் மீது, நம் மீது, இந்த மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிறது.

இன்றைக்குத் தமிழ்நாட்டில் எந்தப் பக்கம் திரும்பினாலும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை. அதிலும் கொலை நடக்காத நாளே கிடையாது. சட்டம் ஒழுங்கு இன்றைக்கு அந்த அளவிற்குச் சீரழிந்து போயிருக்கிறது. என்னவென்று கூறி ஆட்சிக்கு வந்தார்கள்? ‘மாற்றம், மாற்றம்’ என்று கூறி ஆட்சிக்கு வந்தார்களே, மாற்றத்தைக் கொடுத்தார்களா? மிகப்பெரிய ஓர் ஏமாற்றத்தை இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களுக்குப் பரிசாகக் கொடுத்திருக்கிறார்கள்,’என்றார்.

மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை

சென்னை மாநகராட்சி பகுதியில் கொசு ஒழிப்பு உள்ளிட்ட டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதன் ஒருபகுதியாக, 16 விடுதிகளுடன் கூடிய கல்வி நிறுவனங்களில் டெங்கு தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டது. சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் மருத்துவ முகாம் நேற்று நடத்தப்பட்டு, மாணவர்களுக்கு மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு

24 மணி நேரத்தில் 8 படுகொலைகள்; சட்டம்- ஒழுங்கு சீரழிவு

அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா? பிரேமலதா கேள்வி

சென்னை, செப். 21: தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் அறிவிக்கப்படாத மின்வெட்டு உள்ளது. மேலும் 24 மணி நேரத்தில் 8 படுகொலைகள் காரணமாக சட்டம் -ஒழுங்கு சீரழிந்துள்ளது. எனவே அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா என்று தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா எம்எல்ஏ கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

சிவகங்கை மாவட்டத்தில் நடந்த இரட்டைக் கொலை சம்பவம் பொதுமக்களிடையே மிகப்பெரிய அச்சத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. மதுரையில் ஜெய்ஹிந்த்புரம் காவல் நிலையம் அருகே ஒருவர் நடுரோட்டில் விரட்டிச் சென்று வெட்டி படுகொலை, கிருஷ்ணகிரி அருகே டாஸ்மாக் கடையுடன் தொடர்புடைய இடத்தில் ஏற்பட்ட தகராறில் 33 வயது இளைஞர் கல்லால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவமும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்த படுகொலைகளுக்கும், தமிழ்நாட்டில் சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்ததற்கும் அரசு என்ன பதிலளிக்கிறது.

நெய்வேலி என்எல்சி திட்டங்களுக்காக விவசாய நிலங்கள் கையகப்படுத்தப்பட்டு வரும் நிலையில், ஏற்கனவே நிலம் வழங்கிய விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பதை அரசு முதலில் உறுதி செய்ய வேண்டும். முதலில் ஏற்கனவே நிலம் வழங்கிய மக்களுக்கான வாக்குறுதிகளை நிறைவேற்றுங்கள், அதன் பின்னரே புதிய விளைநிலங்களை கையகப்படுத்துவது குறித்து பேசுங்கள்.

தமிழ்நாட்டில் டெங்கு பாதிப்புகளும், உயிரிழப்புகளும் நடந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. எனவே, அரசு வெறும் அறிவிப்புகளோடு நிற்காமல், களத்தில் தீவிரமான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் ரூ.247.15 கோடி பயிர்க்கடன் 50,779 விவசாயிகளுக்கு தள்ளுபடி செய்யப்பட்டதாக கூட்டுறவுத்துறை தெரிவித்துள்ளது. ஆனால், முழுமையான கடன் தள்ளுபடியே தங்களது கோரிக்கை என்று விவசாயிகள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

சென்னை பட்டினப்பாக்கம் பகுதியில் தலைமைச் செயலகம் தொடர்பான அறிவிப்பு குறித்து மீனவர்கள் மத்தியில் அச்சமும், எதிர்ப்பும் ஏற்பட்டுள்ளது. அந்த பகுதியின் மீனவர்களின் வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான கவலைகளை அரசு உரிய முறையில் பரிசீலிக்க வேண்டும்.

கர்நாடக அரசை உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி மீண்டும் காவிரியில் தண்ணீர் திறக்க தமிழக முதல்வர் விவசாயிகள் நலன் கருதி வலியுறுத்துவாரா?.

தமிழகத்தில் அறிவிக்கப்படாத மின்வெட்டு பாதிப்பால் ஒருபுறம், டெங்குவால் பொதுமக்கள் பாதிப்பு ஒருபுறம், கொசு கடியால் மக்கள் அவதி ஒருபுறம், இந்த நிலையில் இன்றைய தமிழ்நாடு, மக்கள் கதி என்ன?. திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது.

விருத்தாசலம் சின்னப்பரூர் மற்றும் பல கிராமங்களில் ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகள் கொள்முதல் செய்யாததானால் மழையில் நனைந்து வீணாவதை அரசு எப்போது தடுக்கப்போகிறது?. இப்படி பல்வேறு மக்கள் பிரச்னைகளுக்கு அரசு மவுனம் காக்காமல் உடனடியாக செயல்படுமா?. இல்லையெனில் செவிடன் காதில் ஊதிய சங்கு போல இந்த அரசு என்று மக்கள் முடிவு செய்வார்கள்.

இவ்வாறு பிரேமலதா வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மக்களை பாதிக்கும் திட்டத்தை கைவிட வேண்டும்

சிப்காட், என்.எல்.சி சுரங்கத்திற்கு கூடுதல் நிலங்களை கையகப்படுத்த துடிப்பதா?

அன்புமணி கண்டனம்

சென்னை, செப்.21: சிப்காட், என்.எல்.சி சுரங்கத்திற்கு கூடுதல் நிலங்களை கையகப்படுத்த துடிப்பதா? மக்களை பாதிக்கும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார். இதுதொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை:

கடலூர் மாவட்டத்தின் தலைநகரமான கடலூரில் 2625 ஏக்கர் பரப்பளவில் சிப்காட் வளாகம் செயல்பட்டு வருகிறது. அதற்கு அருகிலேயே இப்போது குடிக்காடு, தியாகவல்லி கிராமங்களில் 164.20 ஏக்கர் நிலம் கையகப்படுத்துவதற்கான அறிவிக்கையை தமிழக அரசு கடந்த 1ம் தேதி வெளியிட்டுள்ளது. இந்த நிலங்கள் அனைத்தும் பொதுமக்கள் மற்றும் விவசாயிகளிடமிருந்து கடந்த காலங்களில் இரு தனியார் பெரு நிறுவனங்களால் குறைந்த விலையில் பறிக்கப்பட்டவை. அந்த நிலங்களை மீண்டும் தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என பொதுமக்கள் வலியுறுத்தி வந்த நிலையில், அவற்றை அரசே பறிக்கதுடிப்பதை ஏற்க முடியாது.

அதேபோல், என்.எல்.சி நிறுவனத்தின் சுரங்கம் 1 விரிவாக்கத்திற்காக கங்கைகொண்டான் கிராமத்தில் 12.60 ஏக்கர் பரப்பளவிலான 68 துண்டு நிலங்களும், சுரங்கம் 1ஏ விரிவாக்கத்திற்காக வானதிராயபுரம் கிராமத்தில் 3.21 ஏக்கர் பரப்பளவிலான 77 துண்டு நிலங்களும் கையகப்படுத்தப்படும் என்று தமிழக அரசு வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. இவை அனைத்தும் வீட்டுமனை நிலங்களாகும். இவை கையகப்படுத்தப்பட்டால் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்வதற்கு இடமில்லாத நிலை ஏற்படக்கூடும்.

கடலூர் சிப்காட் வளாகத்தில் உள்ள ரசாயன ஆலைகளில் இருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்படாத கழிவுகளால் நிலம், நீர், காற்று ஆகிய அனைத்தும் மாசுபடுகின்றன. தொழிற்சாலை கழிவுகள் நீரிலும், நிலத்திலும் கலந்ததால் கடலூர் மாவட்டத்தில் உள்ள பெண்களின் தாய்ப்பாலிலும், அங்கு விளையும் இளநீரிலும் டையாக்சின் எனப்படும் புற்றுநோயை ஏற்படுத்தக்கூடிய நச்சுப்பொருள்கள் அதிகமாக கலந்திருக்கின்றன. இன்னொரு பக்கம், கடலூர் மாவட்டத்தில் உள்ள என்.எல்.சி நிலக்கரி சுரங்கங்களால் கடலூர் மாவட்டத்தில் உள்ள 30 லட்சம் மக்களும் ஏதேனும் ஒரு வகையில் பாதிக்கப்பட்டிருக்கின்றனர். இத்தகைய சூழலில் மேலும் 1,283 ஏக்கரில் புதிய சிப்காட் வளாகம் அமைப்பட்டால் கடலூர் மாவட்டம் முழுவதும் நச்சுக்காடாக மாறிவிடும்.

கடலூர் மாவட்டத்தில் புதிய சிப்காட் அமைக்கும் திட்டம், என்.எல்.சி சுரங்கம் 1, 1ஏ விரிவாக்கத்திட்டங்கள் ஆகியவற்றையும், அவற்றுக்காக மொத்தம் 1277 ஏக்கர் நிலங்களை கையகப் படுத்துவதற்கான அறிவிக்கைகளையும் தமிழக அரசு உடனடியாக கைவிட வேண்டும். இல்லாவிட்டால் பாதிக்கப்படும் மக்களை திரட்டி மாபெரும் போராட்டத்தை பாட்டாளி மக்கள் கட்சி நடத்தும் என எச்சரிக்கிறேன்.

CHARACTER CAUTION COURTESY

MRF INSTITUTE OF DRIVER DEVELOPMENT (MIDD)

விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

வயது 20-28, 10ஆம் வகுப்பு படித்த, 160cm, உயரமுள்ள திறமையான ஓட்டுனராக வாழ்க்கையில் முன்னேற துடிக்கும் இளம் ஆண்கள் இதற்கு தகுதி உடையவர்கள்.

LMV பயிற்சி 6 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 6,000/-. HMV பயிற்சி 12 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 14,000/-. Two Wheeler பயிற்சி 4 வாரம். பயிற்சி கட்டணம் ரூபாய் 2,000/- தவணை முறையில் செலுத்தலாம். முழுநேர பயிற்சி, **ஓட்டுனர் உரிமம், பயிற்சிக்கான இதர செலவுகள் ஆகியவை பயிற்சி கட்டணத்தில் அடங்கும். அனைவருக்கும் தங்குமிடம் மட்டும் இலவசம்.**

LMV மற்றும் HMV பயிற்சி ஆரம்பம் தேதி 05 October 2026. பயிற்சிக்கான சேர்க்கை துவங்கி உள்ளது. மேலே குறிப்பிட்ட தேதியிலிருந்து ஒவ்வொரு 6 வாரம் பின்னர் LMV பயிற்சியும், ஒவ்வொரு 12 வாரம் பின்னர் HMV பயிற்சியும் நடைபெறும்.

மேலும் நாங்கள் கார்ப்பரேட் கம்பனிகளுக்காக ஒரு நாள் புத்தாக்க பயிற்சியும் [one day refresher training] நடத்துகிறோம்.

கீழ்கண்ட விவரங்களுடன் எப்பொழுது வேண்டுமானாலும் விண்ணப்பிக்கலாம். பெயர், வயது, முகவரி, தொலைபேசி எண், படிப்பு, உயரம், உரிமம் நகல் etc.

விரைந்து செயல்படுங்கள். முதலில் சேருபவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ஓட்டுனரை பணியில் அமர்த்த மற்றும் ஒரு நாள் புத்தாக்க பயிற்சியில் அனுப்ப விரும்பும் நிறுவனங்கள் எங்களை தொடர்பு கொள்ளவும்.

MRF INSTITUTE OF DRIVER DEVELOPMENT
NO.1/16, MADHAVARAM HIGH ROAD,
VADAGARAI, REDHILLS, CHENNAI - 600 052,
TEL: 044 - 2632 3317,
MOB: 98411 51745, 98843 79078.
Email: mrf.institute@mrffmail.com,
gerard.correya@mrfmail.com

க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், B பில்டிங், கங்கா ட்ரினோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலுவலகம் அலகு: எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லக்ஷ்மிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை-600045, தமிழ்நாடு.

மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8 மற்றும் 9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு. இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (இதற்குப் பிறகு சட்டத்தின்படி கடனீட்டு கடனீந்தோர் என்று குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், சட்டத்தின் பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8 &9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளது. **நிரல் (J) இல் குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டு சொத்துகள் அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, எப்படி உள்ளதோ, அதே அடிப்படையில் மின்-ஏலம் மூலமாக 23.10.2026 தேதியன்று விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.**

வ. எண்.	முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B)	சுவாதீன தன்மை (C)	சொத்தின் விவரம் (D)	நிர்ணய விலை (E)	முன்வைப்புத் தொகை ((நிர்ணய விலையில் 10%)(F)	முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G)	ஏல உயர்வுத் தொகை (H)	சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I)	ஏலத் தேதி மற்றும் நேரம் (J)	தெரிந்த வில்லங்கங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K)
1	கடன் எண். HF0539H20100181 பிரகாஷ் (கடன்தாரர்), அவரஞ்சனி M (உப கடன்தாரர்), அப்பு K	11.11.2025 11.11.2025 தேதியின்படி ரூ.29,66,974/- (ரூபாய் இருபத்தொன்பது லட்சத்து அறுபத்தாறாயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்து நான்கு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 15.85% வட்டி.	கையக	சென்னை தெற்கு பதிவு மாவட்டம், பம்மல் சார் பதிவு மாவட்டம், பழைய கிராம எண்கள்.129,100,88,23, புதிய கிராம எண்.20, மனை எண்.51, மோசஸ் தெரு, அய்யப்பா நகர், பம்மல் கிராமம், ஆலந்தூர் வட்டம், தற்போது பல்லாவரம் வட்டம், தாம்பரம், காஞ்சிபுரம் மாவட்டம், பழைய சர்வே எண்.104/1, 104/2, பட்டா எண்.1729 இன்படி புதிய சர்வே எண். 104/49, டி.டி.சி.பி.எண்290/73 இல் உள்ள 3150 ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள காலி நிலம் உள்ள சொத்து. மனை எண்.51 இன் எல்லைகள்: வடக்கில்: மனை எண்.38, தெற்கில்: 20 அடி அகல சாலை, கிழக்கில்: மனை எண்.52, மேற்கில்: மனை எண்.50, பரப்பளவு 3150 ச.அடி.	Rs. 2772000.00/- (ரூபாய் இருபத்தேழு லட்சத்து எழுபத்திரண்டு ஆயிரம் மட்டும்)	Rs. 277200.00/- (ரூபாய் இரண்டு லட்சத்து எழுபத்தேழாயிரத்து இருநூறு மட்டும்)	22-10-2026 Before 5 PM	10,000/-	16-10-2026 (11AM – 4PM)	23-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
2	கடன் எண். LAP0028200000005035707 & HL00028200000005020205 ஆனந்தன் (கடன்தாரர்), ரேவதி (உப கடன்தாரர்)	11.11.2025 11.11.2025 தேதியின்படி ரூ.19,95,235/- அதில் கடன் கணக்கு எண்: LAP0028200000005035707 இன் கீழ் உள்ள ரூ.2,78,871/- மற்றும் கடன் கணக்கு எண். HL00028200000005020205 இன் கீழ் உள்ள ரூ.17,16,364.00/- மற்றும் அதனுடன் கூட கடன் திருப்பிச் செலுத்தப்படும் வரை முறையே ஆண்டுக்கு 14.85% & 14.35% வட்டியுடன்.	கையக	செங்கல்பட்டு மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், அம்மணம்பாக்கம் கிராமம், பழைய சர்வே எண்கள்.157/2a, 157/2c & 157/3b, பட்டா எண்.960 இன்படி மனை எண் 6 புதிய சர்வே எண். 157/3b2 இல் உள்ள தேவராஜ் நகர் என்றறியப்படும் அடுக்குமாடி குடியிருப்பில் 1394 ச.அடி பரப்பளவு உள்ள காலி வீட்டு மனை உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கில்: 40 அடி அகல பஞ்சாயத்து சாலை, தெற்கில்: மனை எண்.7, கிழக்கில்: மனை எண்.5, மேற்கில்: சர்வே எண்.157/3a. அளவீடு: வடக்கில்: 26 அடி 6 அங்குலம், தெற்கில்: 25 அடி 10 அங்குலம், கிழக்கில்: 53 அடி 6 அங்குலம், மேற்கில்: 53 அடி 2 அங்குலம். அனைத்து நிலத்தின் பரப்பளவு 1394 ச.அடி. இந்த சொத்து, காட்டான்குளத்தூர் ஊராட்சி ஒன்றியம் அம்மணம்பாக்கம் கிராமம், மற்றும் பஞ்சாயத்து எல்லை, செங்கல்பட்டு பதிவு மாவட்டம், செங்கல்பட்டு இணை-Ii சார் பதிவு மாவட்டத்திற்குள் உள்ளது.	Rs. 1860097.00/- (ரூபாய் பதினெட்டு லட்சத்து அறுபதாயிரத்து தொன்னூற்றேழு மட்டும்)	Rs. 186009.70/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பத்தாறா யிரத்து ஒன்பது மற்றும் பைசா எழுபது மட்டும்)	22-10-2026 Before 5 PM	10,000/-	16-10-2026 (11AM – 4PM)	23-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை
3	கடன் எண். HF0539H20100010 ஜக்காரியா ஜேகேபி (கடன்தாரர்), ரவிச்சந்திரிகா S (உப கடன்தாரர்)	08.08.2025 08.08.2025 தேதியின்படி ரூ.33,77,724/- (ரூபாய் முப்பத்து மூன்று லட்சத்து எழுபத்து ஏழாயிரத்து எழுநூற்று இருபத்து நான்கு மட்டும்) மற்றும் கடன் தொகையைத் திருப்பிச் செலுத்தும் காலம் வரையிலான கூடுதலான ஆண்டொன்றுக்கு 14.35 வட்டியுடன் கூடிய தொகை.	கையக	அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள நிலம் மற்றும் கட்டிடம் உள்ள சொத்து. மனை எண்.15, S.N0.247/11, பட்டாவின்படி புதிய S.N0.247/39 இல் உள்ள 916/7150 ச. அடியில் பிரிக்கப்படாத பங்காகிய 3984 ச.அடியில் 916 ச.அடி கட்டுமானப் பரப்பு உள்ள பிளாட் எண்.A, இரண்டாவது தளம், பிளாக்.B மற்றும் பொது பங்கு, பகுதி உள்ள விஜய் சாந்தி அபார்ட்மென்ட்டில் உள்ள சொத்து, கந்தசாமி ரோடு, பொருந்தவாக்கம் கிராமம் (வருவாய் பதிவேட்டின்படி மடிப்பாக்கம் பி கிராமம்), சோழிங்கநல்லூர் வட்டம், சென்னை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள்: வடக்கில்: கோபால் முதலியார் சாலை, தெற்கில்: மனை எண்.29, கிழக்கில்: மனை எண்.16, மேற்கில்: சர்வே எண்.218 இல் உள்ள சொத்து. தெற்கு சென்னை பதிவு மாவட்டம், பல்லாவரம் சார் பதிவு மாவட்டத்தில் உள்ளது.	Rs. 3606750.00/- (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து ஆறாயிரத்து எழுநூற்று ஐம்பது மட்டும்)	Rs. 360675.00/- (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து மட்டும்)	22-10-2026 Before 5 PM	10,000/-	16-10-2026 (11AM – 4PM)	23-10-2026 (11 AM- 2PM)	எதுவுமில்லை

ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கட்டணங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோருரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.

ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா-122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, **தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222** மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்-ஏலம் செயல்பாடு மீதான ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரஸீட்ஸ் A/C, ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code- ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பான்ஞ்சசீல் டெக்னிகல் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்-411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ நிரல் (G) இல் 22.10.2026 தேதி அன்றோ அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்-ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை கிளை முகவரி : **எண்.274, 2 ஆவது தளம், காந்தி ரோடு, லக்ஷ்மிபுரம், மேற்கு தாம்பரம், சென்னை-600045, தமிழ்நாடு, கைபேசி எண். +91 8281138143. மின்னஞ்சல் முகவரி p.adith@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்-ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.**

கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 30 நாட்கள் (30) நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.

உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்தித்தாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.

நாள்: 21.09.2026 இடம்: தமிழ்நாடு — **ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்**